| N-0054 |
|---|

| Sub. Code |
|---|
| 200121/200321A |

**COMMON FOR B.A./B.B.A. DEGREE EXAMINATION, MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**Second Semester**

**Tamil**

பகுதி – I – தமிழ் – II

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

பகுதி அ $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. தேம்பாவணியில் மண்ணிற்குத் தேவகுமாரன் வந்த நல்ல காலத்திற்குச் சொல்லப்படும் உவமை எது?

   (a) மண் கனியப் பொன் பொழிந்த மழைக்காலம்

   (b) விண் போற்ற எழுந்தச் சுடரொளிக் காலம்

   (c) கண் காக்கும் காட்சி தெரியும் காலம்

   (d) எண்ணற்ற நற்சிந்தனைகள் தரும் நூல்களின் காலம்

2. ஆர்வம் விதையாக விதைத்தால் கிடைக்கும் விளைபொருள் யாது?

   (a) வரம் (b) பேரின்பம்

   (c) பொறுமை (d) தயவு

3. இறைவனுக்கான குணங்களாகத் தேம்பாவணி மூன்றைக் காட்டுகின்றது. பின்வரும் நான்கில் தேம்பாவணி கூறாத பண்பு எது ?

(a) பொறை (b) மிடி

(c) தாழ்வு (d) அருள்

4. துயரத்தை ஆண்டவன் ஏற்று எதனை மக்களுக்குத் தருவான் என்கிறது தேம்பாவணி ?

(a) இன்பம் (b) அன்பு

(c) பயன் (d) பாவமன்னிப்பு

5. ஆண்டவனை எவ்வாறு சாந்தி போற்றுகிறாள் ?

(a) அறிவாகி நிறைந்தவன்

(b) உலகம் முழுவதும் உறைபவன்

(c) பறிக்கப்படாத வலிமை உடையவன்

(d) நிறைவாழ்வு உடையவன்

6. இறைகுழந்தையின் அடிமேல் விழுவார், புகழ்வார், தொழுவார் யார் ?

(a) சாந்தியின் உறவினர்கள்

(b) சூசையின் உறவினர்கள்

(c) மரியாளின் உறவினர்கள்

(d) ஆயர் குல உறவினர்கள்

7. வானவீதி என்ற கதை எதனை மையமாக வைத்தது ?

(a) ஏவுகணை ஏவப்படுவதை

(b) விமானப் பயணத்தை முன்வைத்து

(c) வானவீதியில் உள்ள நட்சத்திரங்களை முன்வைத்து

(d) வானவீதியில் உள்ள நிலாவை முன்வைத்து

8. தாய் என்னும் தலைப்புடைய கதையின் மையப் பாத்திரம் யாது?

(a) சந்தோஷ் (b) சரவணன்

(c) சங்கர் (d) பத்மநாபன்

9. அரக்க வீரர்களை கம்பன் எவ்வாறு காட்டுகிறான்?

(a) கொற்ற உழிஞையர்

(b) வாகை சூடினோர்

(c) தும்பையந் தொடையலார்

(d) இமைக்காதவர்கள்

10. இலக்குவன் யாருடன் செய்யும் போர் யானை மறமாகக் கம்பரால் காட்டப்படுகிறது?

(a) கும்பகர்ணன் (b) இந்திரசித்தன்

(c) இராவணன் (d) அதிகாயன்

11. உயிரும் உடம்பும் எத்தனை?

(a) பன்னிரண்டு (b) முப்பது

(c) பதினெட்டு (d) இருநூற்றுப் பதினாறு

12. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை என்ற தொடர் எதற்கு எடுத்துக்காட்டு?

(a) அளபெடை

(b) மொழி முதல் அளபெடை

(c) மொழி இடை அளபெடை

(d) மொழி கடை அளபெடை

13. பெயர்ச்சொல் வல்லெழுத்து ஆறும் வந்தால்

(a) ஒற்று மிகும் (b) ஒற்று மிகாது

(c) இயல்பாகும் (d) திரிபாகும்

14. கார் அறுத்தது என்பது எவ்வகை ஆகுபெயர்?

(a) சினையாகு பெயர் (b) கால ஆகுபெயர்

(c) முதலாகு பெயர் (d) குணவாகு பெயர்

15. அறிஞன் என்பது எவ்வகைப்பெயர்?

(a) இடப்பெயர் (b) காலப்பெயர்

(c) குணப்பெயர் (d) தொழில் பெயர்

16. குறிப்பு வினைமுற்று என்பது

(a) காலம் காட்டும் (b) காலம் காட்டாது

(c) முடிந்து நிற்கும் (d) எச்சமாக நிற்கும்

17. மதி முகம் என்பது எவ்வகைத் தொடர்?

(a) இடைச் சொற்தொடர்

(b) உம்மைத் தொகைத் தொடர்

(c) உவமைத்தொகைத் தொடர்

(d) அன்மொழித் தொகைத் தொடர்

18. அடுக்குத்தொடருக்கு எது எடுத்துக்காட்டு?

(a) சலசலவென

(b) பாம்பு, பாம்பு

(c) வீரம் செறிந்த நிலம், கருணை விளைந்த நிலம்

(d) நனிபேதை

19. எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்று பாடியவர் யார்?

(a) இளங்கோ (b) பாரதிதாசன்

(c) பாரதியார் (d) கவிமணி

20. காந்தியக் கவிஞர் என்று போற்றப்பெற்றவர் யார்?

(a) கவிமணி (b) பாரதியார்

(c) பாவேந்தர் (d) இராமலிங்கம் பிள்ளை

21. தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே என்ற நூற்பா எதில் இடம்பெறுகிறது?

(a) இன்னா நாற்பது (b) இனியவை நாற்பது

(c) நாநாற்பது (d) தொல்காப்பியம்

22. தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்களைக் கொண்டு வந்த இத்தாலி நாட்டவர் யார்?

(a) இக்பால் (b) இன்னாசி

(c) இதயதுல்லா (d) வீரமாமுனிவர்

23. திரைப்படத்திற்கு அடிப்படையாக அமைவது எது?

(a) இசை (b) இயக்கம்

(c) கதை (d) நடிகர்கள்

24. வெள்ளிமணி என்ற இணைப்புப் பகுதியைக் கொண்ட நாளிதழ் எது?

(a) தினமணி (b) தினகரன்

(c) தினமலர் (d) தினவிகடன்

25. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எனப் பாடியவர் யார்?

(a) நாலடியார் (b) சம்பந்தர்

(c) அப்பர் (d) சுந்தரர்

26. அன்பே சிவம் என்றது எந்நூல்?

(a) திருக்குறள் (b) சீவகசிந்தாமணி

(c) திருமந்திரம் (d) நாலடியார்

27. பெரியபுராணத்திற்கு உரிய மற்றொரு பெயர் யாது?

(a) சேய்த் தொண்டர் புராணம்

(b) திருத்தொண்டர் திருவந்தாதி

(c) திருத்தொண்டர் சதகம்

(d) திருத்தொண்டர் புராணம்

28. கம்பராமாயணத்தின் மற்றொரு பெயர் யாது?

(a) இராமாவதாரம்

(b) இராமனின் கதை

(c) இராமாயணத் திரட்டு

(d) இராமகாதை

29. ஆய்தம் என்பது எவ்வகை எழுத்து?

(a) உயிர் எழுத்து (b) உயிர் மெய் எழுத்து

(c) மெய் எழுத்து (d) சார்பெழுத்து

30. கமலம் என்ற வடமொழித் தொடர் எவ்வகைப்பட்டது?

(a) தற்பவம் (b) தற்சமம்

(c) தற்கிழமை (d) தற்கூற்று

31. படித்து முடித்தான் என்ற தொடரில் உள்ள படித்து என்பது

(a) வினைச்சொல் (b) வினைமுற்று

(c) வினையெச்சம் (d) பெயரெச்சம்

32. சங்க இலக்கியங்கள் எவ்வகைக் கவிதைகள்?

(a) மரபுக் கவிதைகள் (b) சங்கக் கவிதைகள்

(c) புதுக்கவிதைகள் (d) மெய்யுலகக் கவிதைகள்

33. ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் எப்பெயரில் தொகுக்கப்பெற்றன?

(a) திருமுறைகள் (b) கந்தவேள் திருமுறை

(c) பாசுரங்கள் (d) நாலாயிர திவ்ய பிரபந்தம்

**பகுதி ஆ** (7 × 6 = 42)

பின்வருவனவற்றுள் ஒன்றினுக்குப் பதில் தருக.

34. (a) தேம்பாவணியை எழுதிய புலவர் பற்றி எழுதுக.

(அல்லது)

(b) சாந்தியின் பாத்திரப்படைப்பு எவ்வாறு தேம்பாவணியில் அமைக்கப்பெற்றுள்ளது?

35. (a) ஆயர்களின் செயல்பாடுகள் குறித்துத் தேம்பாவணி குறிப்பன யாவை?

(அல்லது)

(b) வேளை காலம் தெரியாமல் என்ற கதையின் சுருக்கத்தைத் தருக.

36. (a) கம்பன் கையாண்ட புறத்திணை மரபுகள் சிலவற்றைத் தருக.

(அல்லது)

(b) மொழி முதல் எழுத்துக்கள் பற்றி எழுதுக.

37. (a) வினா - வகைகளை விளக்குக.

(அல்லது)

(b) பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஆளும் முறை பற்றி எழுதுக.

38. (a) வேற்றுமைப் புணர்ச்சியை தக்க எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(b) திணை பால் எண் குறித்த செய்திகளைத் தொகுக்க.

39. (a) உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதுக.

(அல்லது)

(b) இதழ்கள் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பது குறித்து எழுதுக.

40. (a) தமிழ் வளர்ச்சிக்கு இசுலாம் சமயம் அளித்த கொடைகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(b) பெரியபுராணம் பற்றிய செய்திகளைத் தொகுக்க.

| N–0051 |
|---|

| Sub. Code |
|---|
| 200111/ 200311A |

**Common for B.A. (Tamil)/B.B.A. DEGREE EXAMINATION, MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

**Tamil**

பகுதி 1 - தமிழ் - 1

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. கிருஷ்ணன் சங்கை எதற்காக எடுத்தான் என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்?

   (a) விளையாட

   (b) பூலோகம் காக்க

   (c) பாரதப்போர் முடிக்க

   (d) சமாதானத்தை ஏற்படுத்த

2. மாலை நேரத்தில் குருவாயூரில் எவ்வகை வேலி அமைக்கப்படுகிறது.

   (a) பூவேலி

   (b) நெய்வேலி

   (c) பாவேலி

   (d) ஸ்ரீவேலி

3. நர்த்தனம் எதன் மீது கிருஷ்ணன் ஆடினான்?

(a) நீர்க்குடம் (b) நாகப்படம்

(c) தேகப்படம் (d) சப்பரம்

4. கண்ணன் இருக்கும் இடம் எது?

(a) ஆப்பாடி (b) பாடிவீடு

(c) ஆயர்தோட்டம் (d) ஆயர்பாடி

5. எவை விதையாகும் பட்டுக்கோட்டையார் பாடுகிறார்?

(a) வியர்வை (b) உண்மை

(c) உழைப்பு (d) அன்பு

6. எது செல்வம் என்கிறார் பட்டுக்கோட்டையார்?

(a) எளிமை (b) திறமை

(c) வலிமை (d) நோயின்மை

7. "என்னப்பன் என்னையன்" என்று யாரைப் பெண்கள் கெஞ்சுவதாகப் பாரதியார் பாடுகிறார்?

(a) முருகன் (b) சிவபெருமான்

(c) இராமன் (d) கண்ணன்

8. பாரதத் தாயினை எத்தனை மொழிகள் கொண்டு பள்ளி எழுச்சி பாடுவதாகப் பாரதியார் குறிப்பிடுகிறார்?

(a) 12 (b) 22

(c) 32 (d) 18

9. உலகம் என்ற பழைய முதலாளி எந்த மன்றத்தில் நிற்க வைக்கப்படுகிறான்?

(a) நீதி மன்றத்தில் (b) அறிவோர் மன்றத்தில்

(c) இலக்கிய மன்றத்தில் (d) பகுத்தறிவு மன்றத்தில்

10. அற்பமாய் ஆயுள் குன்றாமலிருக்க என்ன செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிறார் நாமக்கல்லார் ?

(a) காயகல்பம் (b) மாயவித்தை

(c) ஜாலவித்தை (d) காயசித்தி

11. புருஷன் இட்டதையெல்லாம் பெண்கள் யாரைப்போல் செய்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார் கு.ப.ரா?

(a) நாயைப் போல (b) பிள்ளைகள் போல

(c) அடிமை போல (d) குரங்கு போல

12. காதலியின் பதில் காதலுனுக்கு எப்படி இருந்ததாக மீரா குறிப்பிடுகிறார்?

(a) வேப்பங்காயாய் (b) கற்கண்டாய்

(c) தேனாய் (d) பஞ்சாமிர்தமாய்

13. தாயம் போட்டுத் தொடங்கும் பயணத்தை தடுக்கும் பாம்புகளை விரட்ட சிற்பி சொல்லும் வழி யாது?

(a) ஏணிகளில் மட்டும் ஏறுவோம்

(b) மகுடி எடுத்து ஊதுவோம்

(c) மந்திரங்கள் பல செய்வோம்

(d) சர்ப்ப யாகம் நடத்துவோம்

14. அரசாங்கத்துக் கட்டிலில் தூக்கம் போட்ட முதல் மனிதன் யார் ?

(a) கும்பகர்ணன் (b) மாயோன்

(c) கீரன் (d) மோசிக் கீரன்

15. அப்துல் ரகுமான் காட்டும் தலைவி - தலைவனை வரவேற்றுக் கோலம் போடாதது ஏன்?

(a) அவன் காணாமல் போனதால்

(b) அவன் ஏமாற்றிவிட்டுப் போனதால்

(c) அவன் வேறு யாருடனோ போனதால்

(d) அவன் வீட்டுக்குள்ளேயே இருப்பதால்

16. நாக்கைக் கடி, பல்லை இளி, முதுகை வளை ———————— இவை எல்லாம் எப்போது நடக்கும் ?

(a) ஒருவரிடம் காரியம் நடக்கவேண்டுமானால்

(b) வயிற்றுப் பசி போக்குவதற்காக

(c) தருமம் வாங்குவதற்காக

(d) கோபம் வந்தால்

17. அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன் யார் ?

(a) கிள்ளி வளவன் (b) கரிகால் சோழன்

(c) மனுநீதிச் சோழன் (d) நீதிச் சோழன்

18. இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஆ போல இருந்தவர் யார்?

(a) தயரதன் (b) இராமன்

(c) மந்திரக் கிழவர் (d) மக்கள்

19. பின்வருவனவற்றுள் எது சீறாப்புராணத்தில் அமையாத காண்டம்?

(a) விலாதத்துக் காண்டம்

(b) நுபுவத்துக் காண்டம்

(c) ஹாஜிக் காண்டம்

(d) ஹிஜ்ரத்துக் காண்டம்

20. அறபி ஈச்சங்குலை பொருந்தியதும் எதனை ஓதினான்?

(a) நகிமா (b) கலிமா

(c) சகிமா (d) தகிமா

21. இறை திருக்குமாரனை எக்கூட்டம் விழுந்து விழுந்து பணிந்தது என்று காட்சிப் படலம் கூறுகிறது ?

(a) மக்கள் கூட்டம் (b) தேவர் கூட்டம்

(c) கோவர் கூட்டம் (d) தோவர் கூட்டம்

22. தேம்பாவணி எங்கு அரங்கேற்றம் செய்யப்பட்டது ?

(a) ஆவூர் தேவாலயத்தில்

(b) தரங்கம்பாடியில்

(c) திருச்சி சூசையப்பர் அரங்கில்

(d) மதுரை தமிழ்ச்சங்கத்தில்

23. எதனை மீட்க இறைவன் வந்து பிறந்ததாகத் தேம்பாவணி குறிக்கிறது ?

(a) தொலைந்து போன ஆட்டுக்குட்டியை மீட்க

(b) புண்ணுள்ளே மருந்து நீவிப்போன ஆட்டுக்குட்டியை மீட்க

(c) வழி தவறிய ஆட்டுக்குட்டியை மீட்க

(d) பழி கொண்ட ஆட்டுக் குட்டியை மீட்க

24. திருக்குமரனை ஆயர்கள் வாழ்த்திய வாழ்த்தொலி எது ?

(a) உம்பரும் தொழும் பராபரா

(b) மண்தலம் காக்கும் வேந்தே

(c) வெண்குடை மைந்தா

(d) மண்தல காக்கும் வேலா

25. வெண்மலர் எக்கோலில் பூத்தது என்கிறது தேம்பாவணி ?

(a) இறைவன் கை பட்ட கோல்

(b) சூசையப்பர் பிடித்திருந்த போல்

(c) மரியா பற்றிய கோல்

(d) ஆயர் பற்றிய கோல்

26. தேம்பாவணியாம் கொடி யார் ?

(a) இறைவன்

(b) சூசை

(c) மரியா

(d) ஆயர்

27. ஆறு நூறு சேர்ந்த மூவைந்து பாடல்களை உடையது தேம்பாவணி அப்படியானால் அதன் பாடல் எண்ணிக்கை எவ்வளவு?

(a) 6015

(b) 6600

(c) 3615

(d) 3015

28. தேம்பாவணியின் காப்பியத் தலைவர் யார்?

(a) இறைவன்

(b) ஏசு பிரான்

(c) சூசை

(d) ஆயர்கோன்

29. கண்ணன் வாழும் இடத்தின் பெயர் எதுவெனக் குறிப்பிடுகிறார் கண்ணதாசன்?

(a) ஆகுலம்

(b) கோகுலம்

(c) பாகுலம்

(d) பிருந்தாவனம்

30. தின்ன என்ன கொண்டுவந்து தருவான் கண்ணன்?

(a) பழம் (b) காய்

(c) கன்னல் (d) கொய்யா

31. பின்வருவனவற்றுள் எது பாரதிதாசன் சுட்டாத அப்பன்?

(a) ஓடப்பர் (b) உயரப்பர்

(c) ஒப்பப்பர் (d) ஏடப்பர்

32. பரமபத சோபனப்படம் என்பதனை எதனுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் சிற்பி?

(a) உலகம் (b) தேசம்

(c) ஊர் (d) அரசாங்கம்

33. கண்ணகியின் பதி எது?

(a) புகார்

(b) உறையூர்

(c) மதுரை

(d) வஞ்சி

## பகுதி ஆ (7 × 6 = 42)

பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினுக்கு பதில் தருக..

34. (a) கண்ணதாசன் பாடிய ஸ்ரீகிருஷ்ண கானங்களின் பொருளைத் தொகுத்து எழுது.

(அல்லது)

(b) ஆயர்பாடி மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக.

35. (a) பட்டுகோட்டையார் பாடிய காதல் பாடலின் கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

(அல்லது)

(b) பாரதமாதாவை எவ்வாறு துயில் எழுப்புகிறார் பாரதியார்?

36. (a) தூரன் எழுதிய நிலாப்பிஞ்சு என்ற கவிதை உணர்த்தும் செய்திகளைத் தருக.

(அல்லது)

(b) வல்லிக்கண்ணனின் கவியாற்றலைப் புலப்படுத்துக.

37. (a) சிற்பியின் கவியாற்றலை விளக்குக.

(அல்லது)

(b) அப்துல் ரகுமான் காட்டும் தலைவியின் நிலை பற்றி எழுதுக.

38. (a) கண்ணகி – என்ற பாத்திரம் குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் எழுதுக.

(அல்லது)

(b) உமறுப் புலவரின் கவித்திறத்தை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

39. (a) தேம்பாவணி என்ற நூலின் தலைப்பு எவ்வாறு அந்நூலுக்குப் பொருந்துகிறது என்பதை விளக்குக.

(அல்லது)

(b) இறைவன் காட்சி பற்றி எழுதுக.

40. (a) சாந்தி மரியாள் பற்றிய செய்திகளைத் தருக.

(அல்லது)

(b) சூசையப்பர் குறித்துக் கட்டுரைக்க.

| N–0053 |
|---|

| Sub. Code |
|---|
| 200114 |

**B.A. DEGREE EXAMINATION,**
**MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

**தமிழ்**

**தமிழக வரலாறு**

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** ($33 \times 1 = 33$)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. முதன் முதலில் மெய்க்கீர்த்திகள் வெளியிட்டவர்கள்

   (a) சேரர் (b) சோழர்

   (c) பாண்டியர் (d) பாரி

2. பாண்டியர் வரலாற்றினை அறிய உதவும் செப்பேடு

   (a) வேள்விக்குடி (b) சின்னமனூர்

   (c) உத்திரமேரூர் (d) முதல் இரண்டும் சரி

3. தமிழகத்தை முதன் முதலாக அறிய உதவிய வெளிநாட்டவர்

   (a) யுவான் சுவாங் (b) ஜான் மார்ஷல்

   (c) இட்சுமின் (d) மெகஸ்தனிஸ்

4. வண்புகழ் மூவர் தண்பொழில் பரப்பு எனக் குறிப்பிடும் நூல்

(a) தொல்காப்பியம் (b) நன்னூல்

(c) புறநானூறு (d) கலித்தொகை

5. காடு, மலை நிலங்களில் ஏற்படும் இயற்கை மாறுபாடுகளால் உண்டாவது

(a) குறிஞ்சி (b) முல்லை

(c) பாலை (d) நெய்தல்

6. நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள்

(a) குறவர் (b) பரதவர்

(c) ஆயர் (d) உழவர்

7. தமிழகத்தின் இருண்ட காலம் எனப்படும் காலம்

(a) சோழர் (b) பாண்டியர்

(c) பல்லவர் (d) களப்பிரர்

8. கூரம் செப்பேடுகள் அறிய உதவும் அரச காலம்

(a) களப்பிரர் (b) வடவர்

(c) பாண்டியர் (d) சோழர்

9. வாதாபி கொண்டான் என அழைக்கப்பட்டவர்

(a) மகேந்திரவர்மன் (b) நரசிம்மவர்மன்

(c) இராசசிம்மன் (d) நந்திவர்மன்

10. ‘அவந்தி சுந்தரிகதா’ என்னும் நூலுள் கொடிய பஞ்சம் உண்டான காலம் எனக் குறிக்கப்பெறும் காலம்

(a) நந்திவர்மன் காலம்

(b) இராசசிம்மன் காலம்

(c) பரமேசுவரவர்மன் காலம்

(d) புத்தவர்மன் காலம்

11. சிற்றூர்களை நேரடி பொறுப்பில் ஆட்சி செய்தவர்கள்

(a) வாரியர் (b) ஆளுங்கணத்தார்

(c) எண்கணத்தார் (d) பாளையக்காரர்

12. பல்லவர் காலத்தில் அடைநிலங்கள் எனப்பட்ட நிலங்கள்

(a) குத்தகை நிலங்கள் (b) அரசு நிலங்கள்

(c) தனியார் நிலங்கள் (d) எதுவுமில்லை

13. துர்க்கைக்குக் கோவில் கட்டிய சோழ மன்னன்

(a) ஆதித்த சோழன் (b) பராந்தக சோழன்

(c) விசயாலய சோழன் (d) இராசராசன்

14. மதுராந்தகன் என்னும் உத்தம சோழனுக்கு வழங்கிய சட்டம்

(a) அரிஞ்சயன் (b) பரகேசரி

(c) கோப்பரகேசரி (d) இராசகேசரி

15. இராசராசேச்சுவரம் என அழைக்கப்படும் கோவில் அமைந்துள்ள ஊர்

(a) மதுரை (b) உறையூர்

(c) தஞ்சாவூர் (d) சோழபுரம்

16. சுங்கம் தவிர்த்த சோழன் என்றழைக்கப்பட்ட மன்னன்

(a) நன்னன் (b) குலோத்துங்கன்

(c) இராசசிம்மன் (d) வரகுணன்

17. சோழர்காலத்தில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட நிலம்

(a) சீவிதம் (b) பிரமதேயம்

(c) சாலாபோகம் (d) நத்தம்

18. ஊரவையில் பணிபுரியும் கணக்கு எழுதுவோரின் பெயர்

(a) தண்டல் (b) கிழார்

(c) கரணத்தார் (d) அடிகீழ் நிற்பான்

19. பூ மருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்து இருப்ப எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திக்குரிய மன்னன்

(a) சுந்தர பாண்டியன் (b) குலோத்துங்கன்

(c) செம்பியன் (d) சடையவர்மன்

20. அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனாக விளங்கியவன்

(a) மாலிக்காபூர் (b) வாசப்

(c) சடையவர்மன் (d) இப்ராஹிம்

21. தமிழக வரலாற்றில் அரியணை ஏறிய முதல் பெண்மணி

(a) மீனாட்சி (b) வேலுநாச்சியார்

(c) ஜான்சி ராணி (d) இராணி மங்கம்மாள்

22. பாளையபட்டு ஆட்சி முறையில் இடம் பெற்ற பாளையங்களின் எண்ணிக்கை

(a) 66 (b) 70

(c) 72 (d) 18

23. தஞ்சையை ஆண்ட முதல் மராட்டிய மன்னன்

(a) சாஜி (b) வெங்கோஜி

(c) சரபோஜி (d) துக்கோஜி

24. ஆங்கிலேயருக்கு எதிராய் மருது சகோதரர்கள் உருவாக்கியக் கூட்டிணைப்பு

(a) சிவகங்கை கூட்டிணைப்பு

(b) திருநெல்வேலி கூட்டிணைப்பு

(c) திண்டுக்கல் கூட்டிணைப்பு

(d) எவையுமில்லை

25. ஆங்கிலேயருக்கு எதிராய்ச் சிப்பாய்க் கலகம் எழுந்த ஆண்டு

(a) கி.மு. 1853 (b) கி.பி. 1853

(c) கி.மு. 1863 (d) கி.பி. 1875

26. காந்தியடிகள் தலைமையில் உப்புச் சத்தியா கிரகம் நடைபெற்ற இடம்

(a) தண்டி (b) வேதாரண்யம்

(c) டில்லி (d) இராமேஷ்வரம்

27. தமிழக கடற்சார் பட்டினங்களில் ஒன்று

(a) கோவா (b) புதுச்சேரி

(c) திருச்சி (d) நாகப்பட்டினம்

28. தமிழ் – ஆங்கில அகராதியை உருவாக்கியவர்

(a) இரேனியஸ் (b) போப்பையர்

(c) வின்ஸ்லோ (d) வீரமாமுனிவர்

29. ஆதி மனிதன் நிலையான வாழ்க்கையினை அமைத்துக் கொண்ட காலம்

(a) பழைய கற்காலம் (b) புதிய கற்காலம்

(c) தற்காலம் (d) பெருங்கற்காலம்

30. வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ்கூறு நல்லுகம் ' எனக் குறிப்பிடும் நூல்

(a) நன்னூல் (b) தொல்காப்பியம்

(c) கலித்தொகை (d) புறப்பொருள்

31. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலாசிரியர்

(a) கால்டுவெல் (b) திராவிடன்

(c) பெஸ்கி (d) வீரமாமுனிவர்

32. ஆங்கிலேய வரி தண்டும் அதிகாரிகளின் சித்திரவதைகளில் ஒன்று

(a) கில்லட்டின்

(b) சிரச்சேதம்

(c) தொழுக்கட்டை

(d) சுண்ணாம்புக் கால்வாய்

33. சட்டமறுப்பு இயக்கத்தில் சிறை சென்ற பெண்களின் எண்ணிக்கை

(a) 632

(b) 633

(c) 653

(d) எவருமிலர்

பகுதி ஆ $(7 \times 6 = 42)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

34. (a) தமிழக இயற்கை அமைப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(b) சங்ககால மூவேந்தர்கள் பற்றி கட்டுரைக்க.

35. (a) சங்ககாலக் கல்வி நிலை குறித்து விவரிக்க.

(அல்லது)

(b) களப்பிரர் யார்? அவர்கள் வரலாற்றினை எடுத்துரைக்க.

36. (a) புதிய பல்லவ மரபின் தோற்றத்தினை விவரி.

(அல்லது)

(b) பல்லவர் காலச் சமூகச் சூழலினை விளக்குக.

37. (a) திருப்புறம்பியம் போரின் விளைவுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(b) முதலாம் இராசராசனின் தனிச்சிறப்புகளை விளக்குக.

38. (a) சோழர் ஊராட்சி முறை குறித்துத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(b) முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன் வெற்றிச் சிறப்புகளை விவரி.

39. (a) இந்திய விடுதலையில் தமிழகத்தின் செயற்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(b) மருதுபாண்டியர் விடுதலைப் போரில் ஆற்றிய பங்கினை எடுத்துரைக்க.

40. (a) வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகப் போராட்ட வரலாற்றினை எழுதுக.

(அல்லது)

(b) ஆங்கிலேயர் ஆட்சியில் விளைந்த தீமைகளை விவரிக்க.

---

| N–0052 |
|---|

| Sub. Code |
|---|
| 200113 |

**B.A. DEGREE EXAMINATION,**
**MAY 2021 & DECEMBER 2021**

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**First Semester**

தமிழ்

இக்கால இலக்கியம்

**(CBCS – 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(33 \times 1 = 33)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. பாரதியார் பிறந்த ஊர் எது?
   (a) திரிசிரபுரம் (b) வேதபுரம்
   (c) எட்டயபுரம் (d) ஆனந்தபுரம்

2. சின்னக்குயிலின் மாமன் மகன் யார்?
   (a) மாடன் (b) சேடன்
   (c) அமுதன் (d) மாறன்

3. புரட்சிக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் யார்?
   (a) பாரதியார் (b) சுத்தானந்தர்
   (c) பாரதிதாசன் (d) வாணிதாசன்

4. இளமைக்குப் பாலாக இருப்பது எது?
   (a) மொழி (b) நிலா
   (c) தெய்வம் (d) தமிழ்

5. கவிஞர் கண்ணதாசன் யாது காரணமாக திருச்சி மத்திய சிறையில் இருந்தார்?

(a) கல்லக்குடி போராட்டம்

(b) தனித்தமிழ் இயக்கப் போராட்டம்

(c) ஒத்துழையாமைப் போராட்டம்

(d) சாதிமறுப்புப் போராட்டம்

6. மாங்கனி எக்குலத்தைச் சேர்ந்தவள்?

(a) அரசர் (b) கணிகையர்

(c) அந்தணர் (d) வணிகர்

7. மு. மேத்தா எத்தகு கவிதைகளுக்கு இலக்கணக் கட்டுப்பாடு இல்லை என்கிறார்?

(a) லிமரிக் (b) சென்ட்ரியூ

(c) புதுக்கவிதை (d) படிமக்கவிதை

8. கட்சி விட்டுக் கட்சி மாறும் அரசியல் வாதிகளை வேகம் என்ற கவிதை வழி படம் பிடித்துக் காட்டியவர்

(a) கவிஞர் மேத்தா (b) கவிஞர் மீரா

(c) கவிஞர் சுரதா (d) கவிஞர் வாணி

9. இளம்பிறையின் இயற்பெயர்

(a) க. பஞ்சவர்ணம் (b) க.பூங்காவனம்

(c) த. சுதர்சனன் (d) ப.சு தந்தரவனம்

10. தமிழகத்தில் பெண்ணிய எழுத்தாளர்களில் தனக்கென்று சிறப்பான அடையாளத்தைப் பெற்றவர்?

(a) அம்பை (b) நர்த்தகி

(c) ஆ. வெண்ணிலா (d) தமிழச்சி

11. U[Pம் மூர்த்தி பெற்ற மாநில அரசு விருது எது?

(a) டாக்டர் அப்துல்கலாம்

(b) டாக்டர் ராதாகிருஷ்ணன்

(c) டாக்டர் வ.வே. சு. ஐயர்

(d) டாக்டர். மு. வரதராசனார்

12. ஆங்கிலம், கன்னடம், ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது யாருடைய கவிதைகள்?

(a) இளம்பிறை

(b) வண்ணநிலவன்

(c) ஆ. வெண்ணிலா

(d) தேனம்மை லஷ்மணன்

13. 'சூரியப் பிறைகள்' கவிதைத் தொகுப்பு யாருடைய நூல்?

(a) கவிஞர் தமிழன்பன்

(b) கவிஞர் அப்துல் ரகுமான்

(c) கவிஞர் இளங்கோ

(d) கவிஞர் மாலங்கோ

14. எ.மு. ராஜனின் ஹைக்கூ கவிதைத் தொகுப்பு நூல் எது?

(a) நந்தவனம்

(b) வாழ்க வளமுடன்

(c) பாரதப்போர்

(d) துவக்கம்

15. காப்பியப் பார்வை என்பது எது பற்றியதாக வ.சுப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார்?

(a) கம்பராமாயணம் (b) மகாபாரதம்

(c) பெரியபுராணம் (d) சிந்தாமணி

16. கம்பர் 'தெய்வக் கற்பினாள்' என்று யாரைக் குறிப்பிடுகின்றார்?

(a) கோசலை (b) சுபத்திரை

(c) கைகேயி (d) சீதை

17. இன்னொரு காந்தியாக வாழ நினைத்தது யார்?

(a) சுப்பையா (b) முருகையா

(c) சோமையா (d) கருப்பையா

18. கருப்பையாவின் மனைவி யார்?

(a) சரஸ்வதி (b) லெட்சுமி

(c) பவானி (d) பூங்கோதை

19. சிறுகதையின் தொடக்கமும் முடிவும் எவ்வாறமைய வேண்டும்?

(a) குதிரைப் பந்தயம் (b) யானைப் பந்தயம்

(c) முயலோட்டம் (d) மான்ஓட்டம்

20. ஜெயகாந்தன் கதைகளின் அடிப்படை

(a) சோசலிசவாதம் (b) பெண்ணியவாதம்

(c) யதார்த்தவாதம் (d) பொதுவுடைமைவாதம்

21. முத்து காளை வேலை செய்தது எங்கே?

(a) வட்டாட்சியர் அலுவலகம்

(b) தலைமைச் செயலகம்

(c) பல்கலைக்கழகம்

(d) பள்ளிக் கல்வி

22. பாரதிபாலன் பெற்ற தமிழக அரசின் விருது

(a) பாரதியார் (b) கலைமகள்

(c) செந்தமிழ் (d) தமிழ்சிந்து

23. அகிலன் கண்ணனுக்கு பாரத ஸ்டேட் பாங்க் எந்த சிறுகதைத் தொகுதிக்குப் பரிசு தந்தது?

(a) பாசப்பூக்கள் (b) உறவுகள்

(c) பட்டாம்பூச்சி (d) மேக மூட்டம்

24. இச்சமூகம் தன்னைநிலைப்படுத்திக் கொள்ள எந்த நிறுவனத்தைச் சார்ந்துள்ளது?

(a) அரசாங்கம் (b) பணியிடம்

(c) கல்வி நிலையம் (d) குடும்பம்

25. காந்தியோடு பேசுவேன் என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

(a) எஸ். இராமகிருஷ்ணன்

(b) மா. இராமாமிருதம்

(c) இராஜம் கிருஷ்ணன்

(d) புதுமைப்பித்தன்

26. காந்தி ஆசிரமத்தில் தங்கியிருந்தவர்கள் யார்?

(a) ஆதரவற்றவர்கள்

(b) தொழுநோயாளிகள்

(c) ஆணவக்காரர்கள்

(d) உடல் ஊனமுற்றவர்கள்

27. கடலோரத்தில் வாழும் மக்களின் வாழ்வை எடுத்துரைக்கும் சு. தமிழ்ச்செல்வி நாவல் எது?

(a) சாயம (b) வேதம்

(c) அளம் (d) விண்ணகரம்

28. வடிவின் கணவன் யார்?

(a) மூக்கையன் (b) முத்தையன்

(c) முருகையன் (d) மூவேந்தன்

29. வீட்டின் மூலையில் ஒரு சமையலறைகதையில் குறிப்பிடப்படும் குலதெய்வம் எது?

(a) அம்பே (b) அம்பிகை

(c) அலமேலு (d) அழகம்மை

30. அமெரிக்காவின் தலைவனாக இருந்தவர் இவர்களில் யார்?

(a) ஜார்ஜ் (b) கோயாபஸ்

(c) ஹென்றி (d) கென்னடி

31. சீராளன் ஜெயந்தனின் சிறுகதைத் தொகுப்பு எது?

(a) கடிதம் (b) காயம்

(c) விடுகதை (d) பூக்கள் மலரட்டும்

32. மேத்தாவின் கவிதைகளில் ஒன்று

(a) முழுமதி (b) வேதபாடம்

(c) முதல் தேதி (d) கொற்றவை

33. அனுமன் வைத்ததீயைக் கற்புத் தீயாகக் கண்டவன்

(a) பரதன் (b) வீடணன்

(c) இராவணன் (d) சீதை

பகுதி ஆ (7 × 6 = 42)

எல்லா வினாக்களிலும் (a) அல்லது (b) விற்குப் பதில் தருக.

34. (a) குயிலின் தனித்துயரை விளக்குக.

அல்லது

(b) தமிழின் தொன்மைச் சிறப்பை எடுத்தெழுதுக.

35. (a) அடலேறுவின் காதலை விளக்கி வரைக.

அல்லது

(b) மேயர் மகன் தோட்டிமகனுக்குக் கூறியது யாது?

36. (a) இளம்பிறை நாட்டுப்புறப் பாடலை எழுதி விளக்குக.

அல்லது

(b) 'சூலும் சூலமும்'-தலைப்பில் தேனம்மைலெஷ்மணன் கூறுவன யாவை?

37. (a) அமுதசுரபியின் 'யார்' கவிதைகள் உணர்த்தும் கருத்துக்கள் எவை?

அல்லது

(b) வ.சுப. மாணிக்கனார் பொருந்தநயங்களாக இராமாயணத்தில் குறிப்பிடுவன யாவை?

38. (a) அய்க்கண் உணர்த்தும் காந்திய சிந்தனையை விளக்குக.

அல்லது

(b) பொன்னகரம் கதைக்கருவை எடுத்தெழுதுக.

39. (a) மாறுதடம் உணர்த்தும் நீதியை விளக்குக.

அல்லது

(b) திருஷ்டிப் பரிகாரம் கதையைச் சுருக்கி எழுதுக.

40. (a) 'காந்தியோடுபேசுவேன்' - கதைக்கருவை எடுத்துதெழுதுக.

அல்லது

(b) 'அளம்'-புதினத்தின் கதைக்களத்தைப் புலப்படுத்துக.

———————